செ.வெ.எண்:59 நாள்:24.07.2018

கரூர் மாவட்டம்

**உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் துவக்கி வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:

மக்கள் தொகைப்பெருக்கத்தின் அபாயத்தை உணர்த்தும் வகையிலும், மக்களிடம் இதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் ஆண்டு தோறும் ஜூலை 11 ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக அனுசரிக்கப்படும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. அதனடிப்படையில் இன்று(23.7.2018) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முகப்பில் கல்லூரி மாணவ-மாணிவகள் கலந்துகொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவரகள் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சயர் அலுவலகத்தில் துவங்கிய விழிப்புணர்வு பேரணியானது அரசு கலைக்கல்லூரியில் முடிவுற்றது. இப்பேரணியில் அரசு கலைக்கல்லூரி, கொங்கு கலைஅறிவியல்கல்லூரி, சக்தி மற்றும் அரபிந்தோ செவிலியர் கல்லூரிகளைச்சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கலந்துகொண்டு மக்கள் தொகை பெருக்கத்தின் விளைவுகள் குறித்து பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் பதாகைகள் ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் சென்றனர்.

அதனைத்தொடர்ந்து, தாந்தோணியில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற மக்கள் தொகை தின கருத்தரங்கில் தலைமையேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:

பொதுமக்களிடையே குடும்பநல விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான குடும்பநல முறைகளை பின்பற்ற அறிவுறுத்துவது, மக்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்துவது இத்தினத்தின் அனுசரிப்பதின் நோக்கமாகும்.

இவ்வருடம் நாம் 29-வது உலக மக்கள் தொகை தினத்தை அனுசரிக்கின்றோம். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருத்தை மையமாக வைத்து அனுசரிக்கின்றோம். இந்த ஆண்டு "சிறு குடும்பமே ஓர் அர்த்ததமுள்ள எதிர்கால, ஆரம்பத்திற்கு உறுதுணை" என்ற கருத்தை அடிப்பையாகக்கொண்டு உலக மக்கள் தொகை தினம அனுசரிக்கப்படுகின்றது. பெண்களின் குடும்ப சுமையை குறைத்து நாடு நலம் பெற சிறு குடும்ப நெறியை பின்பற்றி பெருகி வரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த ஆண்களும் ஒத்துழைக்க வேண்டும்.

கல்வியறிவு அனைவருக்கும் அவசியம். அதிலும் பெண் கல்வி மிகவும் அவசியம். குடும்பத்தை அளவோடு வைத்துக்கொள்ள பெண் கல்வி குடும்ப பொருளாதாரம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அதிலுள்ள குழந்தைகளை உருவாக்குவதில் பெரும் பங்கு உள்ளது.
இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

முன்னதாக உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அனைவரும் அவரைப்பின்தொடர்ந்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசுகளை வழங்கிப்பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், வருவாய் கோட்டாட்சியர் (கரூர்) திரு.கு.சரவணமூர்த்தி, துணை இயக்குநர் (மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்) மரு.எலிசபெத்மேரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.அனந்தநாராயணன், நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் திருமதி ஜெயந்தி, திரு.பாலசுப்ரமணியன், வட்டாட்சியர் திரு.கலியமூர்த்தி, மாவட்ட கல்வி இயலாளர் திருமதி பாலமோகனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**